සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

**තෙවන වාර පරීක්ෂණය 2020** | **11 ශ්‍රේණිය**
**மூன்றாம் தவணைப் பரீட்சை 2020** | **தரம் 11**
**Third Term Test 2020** | **Grade 11**

**දෙමළ සාහිත්‍යය**
**தமிழ் இலக்கிய நயம்**
**Tamil Literature**

**පිළිතුරු**
**விடைகள்**
**Answer**

புள்ளித்திட்டம்

பகுதி i பகுதி I

(1 )

1. அ) தாரையால்/ வாலியின் மனைவியால்/அங்கதனின் தாய்
   ஆ) இலக்குமணன்/இலக்குவன் /இலட்சுமணன்

2. அ) ஆண்டாள் ∴ நாச்சியார் ∴ கோதை ∴ சூடிக்கொடுத்த சுடர்கொடி
   ஆ) திருமணம் செய்தல் ∴ மணம் புரிதல் ∴ கல்யாணம் செய்தல்

3. அ) மகவு – சோழநாடு தாய் – காவேரி
   ஆ) மகவுக்கு வேண்டியவற்றைச் செய்து மகவு செம்மையாக வாழ வழிவகுப்பவள் தாய். அதுபோல காவேரி நதி சோழ நாட்டினை வளப்படுத்தி அங்கு மக்கள் வளத்துடன் வாழ உதவுகிறது.

4. அ) குணகடல் – கிழக்குக்கடல் ∴ கீழ்த்திசைக்கடல்
   குடமலை – மேற்றிசை மலை ∴ மேலைத்திசை மலை
   ஆ) கண்ணகி

5. அ) உவமை அணி
   ஆ) வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
   உவமானம் – வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பு
   உவமேயம் – மனதில் வீறுகொண்டெலும் எண்ணங்கள்
   பொதுத்தன்மை – வெட்ட வெட்டத் தழைத்தல் வளர்தல் மேலெழுதல்

(2) 1. திணை – குறிஞ்சி
   துறை – இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் சொல்லியது.

2. நடுச்சாமத்தின் பின் பெருமூச்சு விட்டுத் துயிலுகின்ற யானையைப் போன்று, அவளை அடையாது அவள் நினைவாகப் பெரு மூச்சு விட்டேன் எனத் தலைமகன் அவளை அடைய, எண்ணி வருந்துகின்றமை காட்டப்பட்டுள்ளது.

3. மலையும் மலை சார்ந்த இடமுமான குறிஞ்சி நிலத்துக்குரிய காதல் பற்றியது.

4. உவமை அணி
   உவமானம் – நடுச்சாமத்தில் துயிலும் யானை
   உவமேயம் – தலைமகளை அடையத் தவிக்கும் தலைமகன்
   பொதுத்தன்மை – பெருமூச்சு விடுதல்

5. தொடலை – மாலை

தைஇப் – தொடுத்து

பூங்கட்பேதை – அழகிய கண்களையுடைய பேதை

பானாள் பள்ளி – நடுச்சாமத்தின் பின் உறங்கும்

உயிர்த்து – பெருமூச்சு விட்டேன்

## பகுதி II

(3.)

1. 
   - மேடுபள்ளம் என்று சைக்கிள் மிதித்ததில் கால் விரல்களில் ஊமை வலி
   - கையில் கடிதக் கட்டுடன் வியர்வை நெடியோடு ஊர்வலம் வருதல்
   - உச்சி வெயில் உடலை வெப்பமேற்ற முதுகு நனைதல்.

2. 
   - தபாற்காரனை ஆவலோடு எதிர்கொள்ளும் மக்கள், எதிர்ப்பார்ப்பில் சிறகு முளைத்த ஈக்கள் போல் மொய்த்தல்.
   - அவர்கள் கனவிலும் நினைவிலும் கடிதக்காரனை ஆராதிப்பதில் ஆசுவதம் காணுதல்.
   - ‘எங்களுக்கு கடிதம் இருக்கியா’ எனக் கேட்டல்.
   - வெளிநாடு போன பரிதாவை நினைத்து உருகி கனவுகள் சுமந்த கண்களால் வினா எழுப்புதல்.
   - தபாற்காரனை ஆத்மார்த்த சிநேகிதனை வரவேற்கும் உற்சாகத்தோடு வரவேற்றல்.
   - தபாற்காரனை உறவுமுறையுடன் விளித்து காரியத்தைக் கச்சிதமாய் அறிய வரவேற்றல்.
   - தபாற்காரனை உறவுமுறையுடன் விளித்து காரியத்தைக் கச்சிதமாய் அறிய நினைத்தல்.

3. 
   - வெப்பமான, சூடான காலநிலை கோடைகால நிலை வரட்சி நிலை
   - வெயிற்காலம் விபரிக்கப்படும் விதம்
   - உச்சி வெயில் உடலை வெப்பமேற்றி முதுகு நனைத்தல்.
   - தபாற்காரர் வியர்வை நெடியோடு ஊரை வலம் வருதல்.
   - காற்றை யாரோ கடத்திக் கொண்டு போன பிரமையில் மரங்கள் சோகம் சுமத்தல்.

4. 
   - மரங்கள்
   - பாதை
   - பாடசாலை
   - ஆலமரம்
   - பள்ளிவாசல்
   - வீடுகள்
   - தேநீர்க் கடைகள்
   - கால் நடைகள்

**5.**

அ. எதிர்பார்ப்பில் சிறகு முளைத்த மனித ஈக்கள்

- இங்கு கடிதத்திற்காக தபாற்காரனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மனிதர்களை ஈக்களாகவும் அவர்களின் எதிர்பார்ப்புணர்வை அந்த ஈக்களின் சிறகுகளாகவும் உருவகித்தல்.
- ஈக்கள் ஒரு பொருளை விரைந்து சென்று கூட்டமாக மொய்த்துக் கொள்வதுபோல மக்களும் தபாற்காரனை எதிர்பார்ப்போடு சூழ்ந்து கொள்கின்றனர் எனக் காட்டுவது நயக்கத்தக்கது.

ஆ. நிழல் படுத்துறங்கும் குறுகலான செம்மண் பாதை

- இருபுறமும், பரந்து விரிந்த மரங்களின் நிழல் தொடர்ந்து படிந்திருக்கும் குறுவலான செம்மண் பாதையை நிழல் படுத்துறங்கும் பாதை என வர்ணித்தல் நயமானது.

இ. பரிதாவை நினைத்து உருகி, கனவுகள் சுமந்த கண்கள்

- தொழில் நிமித்தம் பிரிந்து சென்ற தம் கணவரின் கடிதத்தை எதிர்ப்பார்த்திருக்கும் பெண்களின் மன உணர்வுகள் ‘கனவுகள் சுமந்த கண்கள்’ என்பதன் மூலம் உணர்த்தப்படுதல் நயமானது.

## பகுதி III

4.

- உரிமையும் மட்டும் மிகுதியாக விரும்பிக் கடமையைப் புறக்கணித்தால் குழப்பம் மிஞ்சும். அத்துடன் உரிமை நிலைக்காது.
- பலர் இன்று உரிமையைப் பற்றியே போராடுகின்றார்கள் கடமையில் கருத்துச் செலுத்துவது குறைவு.
- எந்தக் குடும்பத்தில் கணவனும் மனைவியும் உரிமையைப் பற்றி மிகுதியாக நினைத்து கடமையைப் புறக்கணிக்கின்றார்களோ அந்தக் குடும்பத்தில் போராட்டம் ஏற்படும்.
- உரிமையைப் பற்றி எண்ணும் அளவுக்குக் கடமையைப் பற்றியும் எண்ண வேண்டும். இல்லையானால் குடும்பப் போராட்டம், நாட்டுக் கலகம், உலகப் போர் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது.
- உரிமையையும் கடமையையும் பலப்படுத்தும் பாலம் அன்பு, அந்த அன்பைத் தவறாகப் பயன்படுத்தினால் உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் ஏற்படும்.
- கடமையைச் செய்யத் தவறுபவர்களுக்கு உரிமை கிடையாது. உரிமையை மிகுதியாக விரும்பிக் கடமையைப் புறக்கணித்தால் உள்ள உள்ள உரிமையும் நிலைக்காது.
- உரிமையைப் பற்றி எண்ணும் அளவுக்கு கடமையைப் பற்றியும் உணர்வதற்குக் கற்றுக் கொண்டால் எங்கும் அமைதி நிலவும்.
- முன்னைய காலத்தில் உரிமை சிலருக்கே, ஆனால் இன்று நாகரிகம் வளர்ச்சியடைந்துள்ள இக்காலகட்டத்தில் மனிதருக்குள் பாகுபாடு பார்க்கக்கூடாது. உயர்ந்தவர், தாழ்ந்தவர் பேதமில்லை. அவரவர்க்குள்ள கடமைகள் மதிப்புடன் ஆற்றப்பட வேண்டும்

6

1. சிற்றின்பக் காதல்

சுனைப்பூ.........

- இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் தனக்குத்தானே சொல்வதனூடாக சிற்றின்பக் காதல் வெளிப்படுத்தல்.
- ‘நீர்ச்சுனையின் அருகே உள்ள பூக்களைப் பறித்து மாலையைத் தொடுத்து தினைத் தோட்டத்துக்கு வரும் கிளிகளை விரட்டுகின்ற அழகிய கண்களை உடைய இப்பேதைப் பெண்தான் அறிந்தாளோ? இல்லையோ?’ என ஏக்கத்துடன் உரைப்பதன் மூலம்.

- ‘நடுச்சாமத்தின் பின் துயிலும் யானையைப் போல் பெருமூச்சு விட்டேன். என் உள்ளம் மீண்டும் அவளிடமே சென்று விட்டது’ என்று கூறுவதன் மூலம்.

சிரல்வாய்.....

- செயல் முற்றுப்பெற்று மீளுகின்ற தலைமகன் பாகனுக்குச் சொல்வதினூடாகச் சிற்றின்பக்காதல் வெளிப்படுத்தல்.
- சிறந்த செல்வத்தையும், மழை போன்ற குளிர்ந்த கண்களையும் சிலவாகிய மொழிகளையும் உடைய காதலியின் ஊரானது நமக்கு நல் விருந்தாய் அமையும் இடமாகட்டும் என்பதனூடாத் தலைவன் காதலியைச் சேர்ந்து இன்புற்றிருக்க விரும்புதல் புலனாகிறது.

உள்ளம் போய்......

- தமயந்தி காதல் மீக்கூர, உள்ளம் வெட்கம் முதலிய யாவற்றையும் இழந்து உயிரும் தளரப் பெற்றாள் என்று சொல்வதனூடாக சிற்றின்பக்காதல் வெளிப்படுதல்.
- மன்மதனுடைய மலர்கணைகள் தன் உள்ளத்தில் பாய்ந்து வருத்துவதாகக் கூறுதல்.
- காதலால் உள்ளம் போய், வெட்கம் போய், சோர்ந்து, கண்களிலிருந்து நீர் ஓட, நெருப்பில் வேகின்ற மெல்லிய தளிர் போன்று ஆவி தளர்ந்து சோர்வுற்றதாக் கூறுதல்.

2. பேரின்பக் காதல்

மத்தளம் கொட்ட.......

- கண்ணன் மீது காதல் கொண்ட ஆண்டாள், தன்னை அவனிடமே அர்ப்பணிக்கிறாள்.
- கனவிலும் நனவிலும் கண்ணன் நினைவாகவே காணப்படுகின்ற ஆண்டாள் கண்ணனே தனது கைத்தலம் பற்றுவதாகக் கனவு காண்கிறாள்.